(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 72.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2011, பெப்புருவரி 09, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0041/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான, கௌரவ ஜோண் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே, கௌரவ ரோகித்த போகொல்லாகம ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட அ.பொ.கு அறிக்கைகள் மீதும், கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் 2007.01.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்ன அவர்களால் 2006, ஜூலை 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும், அரசாங்கக் கணக்குகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹக்கீம் அவர்களால் 2007.11.29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS12 ஆம் இலக்க அறிக்கை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) அவ்வறிக்கைகளின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0528/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், உள்ளக சுற்றுவட்ட வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0700/ '10

3.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி அமைச்சின் கீழ் வரும் சட்டங்கள் ஒழுங்கு விதிகள் ஆகியவற்றில் மாற்றங்களை சிபார்சு செய்வதற்காக இவருக்கு முன்னிருந்த அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கையையும்,

(ii) அக் குழுக்களால் பாpசிலிக்கப்பட்ட விடயப்பரப்புகளையும்,

(iii) அவற்றுள், அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்த குழுக்களின் எண்ணிக்கையையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) அறிக்கை சமர்ப்பிக்காத குழுக்கள் விரைவாக அவற்றைச் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) அவ்வறிக்கைகளுள் எவையேனும்,

(i) விரைவான தீர்மானங்களை ஊக்குவிப்பதுடன், நீதி வழங்கலை தாமதமடையச் செய்யும் காலக்கெடு கோரும் விண்ணப்பங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஊக்கமளிக்காத நீதிபதிகளுக்கும் நீதவான்களுக்குமான செயலாற்றச் சுட்டிகள்,

(ii) சிறைச்சாலைகளில் நெருக்கடியையும், இளம் ஆட்களுக்கான பொருத்தமில்லாத தண்டனைகளையும் குறைப்பதற்கான ஓர் அறிவார்ந்த தீர்ப்பளிக்கும் கொள்கை,

(iii) நீதித்துறைச் செயற்பாடுகள் ஊடாக மோதல் போக்கை நாடுவதை குறைப்பதற்காக சமரசம் மற்றும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறைகள்,

(iv) தண்டனை என்பது தண்டனை கொடுப்பதற்காக அல்லாமல், திருத்துவதையும் குற்றம் புரியாது தடுப்பதையும் நோக்காகக் கொண்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, நீதிபதிகள், நீதவான்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு பயிற்சியளித்தல்

என்பவற்றை சிபார்சு செய்ததா என அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) அவ்வாறாயின், அவ் அறிக்கைகளின் அடிப்படையில் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், இவ்விலக்குகளை அடைவதற்கான ஏனைய ஏற்பாடுகளைச் செய்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0789/ ’10

4.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) தாபிக்கப்பட்டுள்ள அநாதை இல்லங்களில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி அநாதை இல்லங்களில் உள்ளஅகதிகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் சேவைகள் யாவை

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அகதிகளின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற வேலைத்திட்டம் யாது,

(ii) மேற்படி மீள் குடியேற்ற நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காலகட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0859/ ’10

5.

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி மதிப்பீட்டை தயாரித்த நிறுவனம் யாதென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீடு மற்றும் கட்டடத்தின் திட்டவமைப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்திற்கு ஏற்புடைய,

(i) ஒப்பந்தக்காரர் அல்லது ஒப்பந்தக்காரர்கள் யாரென்பதையும்,

(ii) ஆலோசனை கம்பனி அல்லது நிறுவனமொன்று இருப்பின் அது யாதென்பதையும்,

(iii) மேற்பார்வை செய்கின்ற நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பஸ் நிலையத்தின் இயல்பு மற்றும் சம்பந்தப்பட்ட கட்டடத்தில் நடத்திச்செல்ல உத்தேசித்துள்ள நிறுவனங்கள் அல்லது தொழில்முயற்சிகள் யாவையென்பதையும்,

(ii) இந்தக் கால கட்டத்தில் வியாபார நிலையங்களை வழங்கும் போது பின்பற்றும் வழிமுறை யாதென்பதையும்,

(iii) பஸ் நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு இணையாக பஸ் நிலையத்தை அண்டிய அத்துடன் காலி நகரின் ஏனைய பிரதேசங்களினின்று வெளியேற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகள் மற்றும் தற்காலிக வியாபார நிலையங்களைக் கொண்டிருந்தவர்களுக்கு வழங்கும் நிவாரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0878/ '10

6.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம பிரதேசசபை ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவின் லெலனவர தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடலுக்கு செலவிட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிலத்திலுள்ள அபிவிருத்திகளுக்கான மதிப்பீட்டிற்கமைய குறித்த கருத்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரர் மேற்கொண்டுள்ள வேலைகளில் பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக பிரதேச சபையுடன் உடன்படிக்கையுடன் கைச்சாத்திட்டவர் யார் என்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அது தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0431/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக பதவி ஏற்றதில் இருந்து, அவர் எத்தனை தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்பதையும்,

(ii) விஜயம் செய்த நாட்டின் பெயர், விஜயத்துக்கான காரணம், அமைச்சருக்கான செலவு, கூடச்சென்றவர்களின் பெயர்கள், ஒவ்வொரு விஜயத்திலும் அவர்களால் ஏற்பட்ட செலவு ஆகிவற்றைத் தனித்தனியாகவும்,

(iii) இவ்வொவ்வொரு விஜயத்தினாலும் நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 5 வருடங்களில், தற்போதைய அமைச்சருக்கு முன்பு அமைச்சராக இருந்தவர்கள் அதே நாட்டிற்கு எத்தனை தடவைகள் விஜயம் செய்தனர் என்பதையும்,

(ii) அவர்கள் செலவிட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0535/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், சியம்பலாண்டுவ - பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0790/ '10

9.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— இடர் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஏற்பட்ட சூறாவளியினால் அம்பாறை பிரதேச செயலகப் பிரிவுக்குரிய பரகஹகெலே கிராமத்தில் வீடுகள் சிலவற்றுக்கு சேதங்கள் ஏற்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த நிலைமையினால் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) ஒவ்வொரு வீட்டுக்கும் ஏற்பட்டுள்ள சேதம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) அது தொடர்பாக அரசினால் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iv) அதற்காக அரசு செலவிட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0860/ '10

10.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சரினால், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படுகின்றதா என்தையும்,

(ii) குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் மாவட்ட மற்றும் கல்வி வலய ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்,

(iii) இதன்பொருட்டு நிதி வழங்கும் உள்நாட்டு அல்லத வெளிநாட்டு நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை மற்றும் வழங்கும் உணவு யாது என்பதையும்,

(v) இந்த நிகழச்சித் திட்டம் பாடசாலை மட்டத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித் திட்டதின் கீழ், பாடசாலைகளுக்கு உணவு வழங்குகின்ற அநேகமான கல்வி வலயங்களில் உணவு வழங்குநர்களுக்கு உரிய முறையில் பணம் செலுத்ததப்படவில்லை என்பதையும்,

(ii) உணவு வழங்குநர்களுக்கு பணம் செலுத்துவது தாமதமாயுள்ளதால் இவர்களுக்கு அநீதி நேர்த்துள்ளதென்பதையும், இதனால் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தடையேற்படுவதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவு வழங்குநர்களுக்கு இறுதியாக பணம் செலுத்தியுள்ள மாதம் யாதென்பதையும்,

(ii) தற்போது இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள நிலுவைத் தொகை அந்தந்த மாவட்டங்கள் மற்றும் கல்வி வலய ரீதியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0879/ ' 10

11.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பண்டாரகம மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில்,

(i) நோயளர்கள் தங்கியிருப்பதற்கானதொரு இடம்,

(ii) நோயாளர்களைப் பரிசோதிப்பதற்கான போதியளவு அறைகள்,

(iii) மருந்தகத்திற்கான ஒரு குறிப்பிட்ட இடம்,

(iv) தடுப்பூசி ஏற்றுவதற்கான விசேட அறை,

(v) E.C.G. பரிசோதனை நடாத்தவென ஒதுக்கப்பட்ட ஒரு அறை,

(vi) நோயாளர்களுக்கும், பணியாட்தொகுதியினருக்குமான மலசலகூட வசதிகள்,

(vii) ஒழுங்கானதொரு அவசர சிகிச்சைப் பிரிவு,

(viii) முறைசார்ந்ததொரு இரசாயண ஆய்வுகூடம்,

இல்லையா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வினாக்களில் ஒன்றுக்கு அல்லது பலவற்றுக்கான விடை "ஆம்" எனில், அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எவ்வளவு காலத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0539/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், போகஹவெவ – புல்மூட்டை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0598/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அடுத்த 8 வருடங்களில் எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும்,

(ii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா வருமானத்தை வருடவாரியாகவும்,

(iii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா கடன் சுமையை வருடவாரியாகவும்

(iv) 01.01.1994, 01.01.2005, 01.08.2010 ஆகிய திகதிகளில் உள்ளவாறு, தலா ஈட்டல்களினதும் கடனினதும் பெறுமதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன் ?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

சமூக சேவைகள் அமைச்சர்,— தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்),— தேர்தல்களில் வாக்களிப்பதற்காக வலிமையிழப்பிற்குட்பட்ட ஓர் ஆளுடன் ஆளொருவர் உடன் செல்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் (262ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தையும், 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தையும், 1981ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தையும், 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தையும், அத்துடன் 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தையும் திருத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"மைத்திரிபால சேனாநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ ஹுனைஸ் பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"ஹெல உதாவ தேசிய இயக்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1681/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய 1685/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்— "1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

7.

மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

8.

இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

9.

பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.